

We Shine Academy™

guiding you to get through

# நடப்பு நிகழ்வுகள்

# (CURRENT AFFAIRS)

## பிப்ரவரி - 2020

We Are Here..!! To Guide You..!!



# WeShine Study Circle

# TNPSC

## நடப்பு நிகழ்வுகள்

## (CURRENT AFFAIRS)

## பிப்ரவரி - 13.02.2020

We Shine Academy™
guiding you to get through


Main Office @

**WeShine Study Circle**
Chrompet, Chennai
Phone: 8939144344, 8939244344

Branch Office @

**WeShine Study Circle**

Plot No: 47/60, "AK" Block,
7th Main Road, Anna Nagar
Chennai, Tamil Nadu – 600 040.

3rd Floor, West Wing, GokulArcarde,
No.2, Sardar Patel Road, Adyar
Chennai, Tamil Nadu– 600020.

https://weshineacademy.com

# பொருளடக்கம்

- தேசிய நிகழ்வுகள்
- சர்வதேச நிகழ்வுகள்
- வர்த்தக நிகழ்வுகள்









We Shine Academy™

## தேசிய நிகழ்வுகள்

- **இந்திய உச்ச நீதிமன்றமானது சரத்து 16 (4)ன் கீழ் இடஒதுக்கீடானது ஒருவர் அரசாங்கப் பணியில் சேரும் போது மட்டுமே வழங்க முடியும்** என்றும் **பதவி உயர்வுகளில் இடஒதுக்கீடு வழங்க முடியாது** என்ற வரலாற்றுச் சிறப்புமிக்க **தீர்ப்பை வழங்கியுள்ளது.**
  - இந்திரா சவ்ஹானி (எதிர்) இந்திய அரசு மற்றும் எம்.நாகராஜ் வழக்கு (1992)
  - **செய்தி துளிகள்:**
    - நியமனங்கள் மற்றும் பதவி உயர்வுகளில் மாநிலங்கள் கட்டாயம் இட ஒதுக்கீடு வழங்க வேண்டும் என்று அவசியமில்லை என்று இந்திய உச்ச நீதிமன்றம் சமீபத்தில் தீர்ப்பளித்துள்ளது.
    - பதவி உயர்வுகளில் இடஒதுக்கீடு அளிப்பது அடிப்படை உரிமை இல்லை என்றும் உச்ச நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளது.

## சர்வதேச நிகழ்வுகள்

- **மீன்வளத் துறையில் இந்தியாவுக்கும் ஐஸ்லாந்துக்கும்** இடையில் கையெழுத்திடப்பட்ட **புரிந்துணர்வு ஒப்பந்தத்திற்கு மத்திய அமைச்சரவை ஒப்புதல்** அளித்தது.

- ○ உள்நாட்டு மீன்வளத்தை மேம்படுத்துவதற்காக 2019 செப்டம்பரில் நாடுகள் ஒப்பந்தங்களில் கையெழுத்திட்டன.
- ○ **செய்தி துளிகள்:**
  - ▪ இந்த ஒப்பந்தம் இந்தியாவுக்கும் ஐஸ்லாந்துக்கும் இடையிலான இருதரப்பு ஒத்துழைப்பை பலப்படுத்துகிறது.
  - ▪ பொருளாதார கணக்கெடுப்பு 2020 இன் படி, விவசாயம் மற்றும் வனவியல் ஆகியவற்றுடன் இந்தியாவின் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 6.58% மீன்வள பங்களிப்பு செய்கிறது. 2018-19ஆம் ஆண்டிற்கான கடல் பொருட்களின் ஏற்றுமதி 13.92 லட்சம் டன்.

- **இந்தியாவிற்கும் இலங்கைக்கும் இடையில் கையெழுத்திடப்பட்ட** DTAA (Double Taxation Avoidance Agreement) (இரட்டை வரிவிதிப்பு தவிர்ப்பு ஒப்பந்தம்) **திருத்துவதற்கான நெறிமுறைக்கு மத்திய அமைச்சரவை ஒப்புதல் அளித்தது.**
  - ○ நிதி ஏய்ப்பு தடுப்பு தொடர்பாக DTAA திருத்தப்பட வேண்டும்.

- **சியாரா புயல் வடக்கு ஐரோப்பாவைத் தாக்கிய ஒரு மிகப்பெரிய புயலாகும்.** இந்தப் புயலானது இப்பகுதியில் போக்குவரத்திற்கும் பொது நிகழ்வுகளுக்கும் இடையூறு விளைவிக்கின்றது.
  - ○ ஐக்கிய இராஜ்ஜியத்தில் **'சியாரா'** என்ற பெயரிடப்பட்ட இந்தப் பயுலானது அயர்லாந்து, பிரான்சு, பெல்ஜியம், நெதர்லாந்து, சுவிட்சர்லாந்து மற்றும் ஜெர்மனி ஆகிய நாடுகளைத் தாக்கும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது.

- **செய்தி துளிகள்:**
    - **ஜெர்மனியில்** இது ‘**சபின்**’ என்று குறிப்பிடப்படுகின்றது.
    - வானிலை நிகழ்வுகளைக் கண்காணிப்பதற்கு இன்னும் ஒரு முழு அளவிலான ஐரோப்பிய அமைப்பு இல்லாத காரணத்தால் இந்த புயலுக்கு இரண்டு பெயர்கள் உள்ளன.

- **‘அஜயா வாரியர் - 2020’** என்ற **ஒரு கூட்டு இராணுவப் பயிற்சியின் ஐந்தாவது பதிப்பானது ஐக்கிய இராஜ்ஜியத்தின் சாலிஸ்பரி சமவெளியில்** நடத்தப்பட இருக்கின்றது.
    - அஜயா வாரியர் ஆனது இந்தியாவிற்கும், இங்கிலாந்திற்கும் இடையே நடத்தப்படும் ஒரு கூட்டு இராணுவப் பயிற்சியாகும்.
    - இது முதல் முறையாக 2013 ஆம் ஆண்டில் நடத்தப்பட்டது.
    - **செய்தி துளிகள்:**
        - நகர்ப்புற மற்றும் நகர்ப் புறங்களை ஒட்டியுள்ள பகுதிகளில் பயங்கரவாத எதிர்ப்பு நடவடிக்கைக்கு முக்கியத்துவம் அளித்து, படைப் பிரிவு அளவிலான கூட்டு பயிற்சியை நடத்துவதே இந்தப் பயிற்சியின் நோக்கமாகும்.

## வர்த்தக நிகழ்வுகள்

- **2020 ஆம் ஆண்டு ஜூலை மாதத்திற்குள் டிஜிட்டல் பண வழங்கீட்டுக் குறியீட்டை உருவாக்க இருப்பதாக இந்திய ரிசர்வ்**

**வங்கி அறிவித்துள்ளது.**

- நாட்டில் பணப் பரிமாற்றங்களின் டிஜிட்டல் மயமாக்கத்தைக் கண்காணிப்பதே இந்தக் குறியீட்டு உருவாக்கத்தின் முக்கிய நோக்கமாகும்.
- **செய்தி துளிகள்:**
  - டிஜிட்டல் பணப் பரிமாற்றங்களை கண்காணிப்பதற்காக மத்திய வங்கியானது டிஜிட்டல் பண வழங்கீட்டுக் குறியீட்டை வெளியிட இருக்கின்றது.
  - இந்தக் குறியீட்டில் வகைப்பாட்டை அறிமுகப்படுத்த இந்திய ரிசர்வ் வங்கி திட்டமிட்டுள்ளது.

## திருக்குறள்

**குறள் : 107**

குறள் பால்: அறத்துப்பால்

குறள் இயல்: இல்லறவியல்

குறள் அதிகாரம் : செய்ந்நன்றி அறிதல்

**எழுமை எழுபிறப்பும் உள்ளுவர் தங்கண்**

**விழுமந் துடைத்தவர் நட்பு.**

**விளக்கம்:** நல்லவர், தம் துன்பத்தை நீக்கியவரின் நட்பை தொடர்ந்து வருகின்ற ஏழுவகைப் பிறப்புகளிலும் மறவாது நினைப்பர்.



We Shine Academy™